**செய்தி வெளியீடு எண்: 066** **நாள்: 25.01.2019**

**செய்தி வெளியீடு**

ஐ.நா.பொதுச்சபை ஒவ்வோராண்டும் ஒரு தலைப்பில், உதாரணமாக கணித ஆண்டு, புவி ஆண்டு என்பது போல அறிவித்து கொண்டாடும். அந்த வகையில் 2019 ஆம் ஆண்டினை மண்ணின் மொழி (International Indigenous Year of Languages) ஆண்டாக அறிவித்துள்ளது.

ஒவ்வொரு நாட்டின் தாய்மொழியும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றி வளர்ந்து வருகிறது. நாடுகளின் மொழிவளம், பண்பாட்டுக் கருவூலம் மிகப் பெரிய அறிவுசார் சொத்தாக உலக நாடுகள் வழியாக ஐக்கிய சபை போற்றி வருகிறது. இதன் மூலம் நாடுகளின் மக்களின் மொழி, பண்பாட்டு வளர்ச்சி, பழக்கவழக்கங்கள், விழுமியங்கள் பட்டியலிடப்பட்டு அவைகளையெல்லாம் பல்வேறு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து ஓர் ஆழ்ந்த ஆய்வுக்களமாக உருவாக்குவதுதான் ஐ.நா. பொதுசபை இவ்வாண்டின் குறிக்கோளாக நிர்ணயம் செய்துள்ளது.

ஒரு நாட்டின் மொழி தேய்கிறது என்றால், ஒரு மாபெரும் அறிவுக்கருவூலம் சாம்பலாகிறது என்று பொருள்.

ஒரு மொழி தேய்ந்து அழிவதும், பண்பாடு ஒடுங்கிவிடுவதும் அந்த பண்பாடு உலகளாவிய அளவில் பரவுவதை தடுக்கும் விதமாக மாபெரும் அளவில் உலகளாவிய கருத்தரங்கம் ஒன்று (Global Conference) இவ்வாண்டு சனவரி திங்கள் 28 ஆம் நாள் பிரான்சு நாட்டில் யுனஸ்கோ அரங்கில் நடைபெறவுள்ளது.

இவ்வரங்கில் கனடா நாட்டின் மரபு மற்றும் பன்முகப் பண்பாட்டுத் துறை அமைச்சர், பெரு நாட்டின் பண்பாட்டுத் துறை அமைச்சர், ரஷ்ய நாட்டின் பாரம்பரிய தொடர்புகள் துறை அமைச்சர், ஐக்கிய நாட்டு சபையின் மண்ணின் மைந்தர்கள் உரிமைக் காப்பு சிறப்பு அலுவலர், மெக்சிகோ நாட்டின் தேசிய மண்ணின் மொழி நிறுவன இயக்குநர், ஆஸ்திரேலியா நாட்டின் பல்கலைக்கழகத்தின் தலைமை செயல் அலுவலர் உள்ளிட்ட 300–க்கும் மேற்பட்ட உலக பன்னாட்டு வல்லுநர்கள் கலந்துகொள்ளும் இந்த உலகளாவிய கருத்தரங்கத்தில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்களையும் யுனெஸ்கோ அமைப்பு சிறப்புரையாற்ற அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ் மொழியின் நீண்ட நெடிய மொழி வளர்ச்சியைப் பற்றியும் தமிழ்நாட்டின் பண்பாட்டுக் கருவூலங்களை பேணிப்பாதுகாக்கும் முறைமைகளையும், உலகப்பொதுமறையாம் நம் திருக்குறளினை உலகப் பொது

நூலாக அறிவிக்க வலியுறுத்தியும், மதுரையில் அமைந்துள்ள உலகத்தமிழ்ச் சங்கத்தில் தமிழர் பண்பாட்டு காட்சியகத்தின் சிறப்புக் கூறுகளையும் இந்திய நாட்டிலேயே முதன் முறையாக ஏன், உலகநாடுகளிலேயே இதுவரையும் செயற்படுத்த முடியாத அளவில் முதன் முறையாக 24 மணிநேரமும் தொலைபேசியில் அழைத்தால் ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்லினை கட்டணமில்லா தொலைபேசி வழியாக கூறும் “சொற்குவை” திட்டத்தினை குறித்தும் மாண்புமிகு புரட்சித்தைலைவி அம்மா, தமிழ் வளர்ச்சிக்கு செய்துள்ள ஈடில்லாத பணிகளையும், அதனை நன்முறையாக வழிநடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் நல்லாசியுடன் பிரான்சு நாட்டில் உரை நிகழ்த்த உள்ளார்.

இது தொடர்பாக, மாண்புமிகு அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் **28.01.2019** அன்று புறப்பட்டு சென்று, அன்று யுனெஸ்கோவில் நடைபெற உள்ள கருத்தரங்கில் உரை நிகழ்த்துகிறார். அதனைத் தொடர்ந்து, **29, 30, 31.01.2019** ஆகிய தினங்களில் பிரான்ஸ் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். அவ்வமயம், பிரான்ஸ் நாட்டிலுள்ள உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகங்களை போல, சென்னை எழும்பூர் அருங்காட்சியத்தையும் உலகத்தரத்தில் உயர்த்திடவும், அங்குள்ள தமிழ்ச் சங்கங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்திடவும், தமிழ் வளர்மையம், தமிழ்ப் பண்பாட்டு மையம் ஆகியவற்றினை தொடங்கி வளர்த்திடவும், திருக்குறளை உலகப் பொது நூலாக அறிவித்திட கருத்துரு சமர்ப்பித்திடவும் இப்பயணம் வழிவகை செய்யும் என கருதப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**